தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

Online Newspaper in Tamil Vol.10 13.05.2012


# புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (48)

**48.1960களின் பிற்கூறில் வடக்கில் இருந்த நிலைமை!**



புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் என்னிடம் விசாரித்த, இராணுவத்துக்கும் பொதுமக்களுக்குமிடையிலான மோதல் சம்பவம், 1970 பொதுத்தேர்தலுக்குச் சில மாதங்களுக்கு முன்பாக நடந்தது. அதுபற்றி கிளிநொச்சிப் பகுதியில் முன்பு எமது கட்சியுடனோ அல்லது விவசாயிகள் சங்கத்துடனோ இணைந்து வேலை செய்த, தமிழ் தேசியப் போராட்டம் ஆரம்பமான பின்னர் புலிகளுடன் இணைந்துகொண்ட யாரோ, அவர்களுக்கு அந்தச் சம்பவம் பற்றிச் சொல்லியிருக்க வேண்டும். சொன்னவர்கள் ஓரளவு அந்தச் சம்பவம் பற்றி விபரமாகக் கூறியிருக்கக்கூடினும், அந்த நேரத்தில் அந்தப் பிரதேசத்தில் கட்சி வேலைகளுக்கு இணைப் பொறுப்பாளராக இருந்த என்னிடமும் அது பற்றி அறிந்துகொள்ள விரும்பியிருக்கிறார்கள் என நினைக்கிறேன்.

அந்தச் சம்பவம் இடம்பெற்ற போது, அந்தப் பகுதியில் நான் இருக்காத போதும், அதுபற்றி நான் அறிந்த தகவல்களை புலிகளுக்கு விளக்கிக் கூறவேண்டிய கட்டாயத்தில் இருந்தேன். புலிகளைப் பொறுத்தவரையில், நடைபெறும் சம்பவங்களின் அரசியல் பின்னணி. சூழ்நிலை என்பனவற்றைவிட, ஜேம்ஸ்பொன்ட் அல்லது ‘சீரியல்’ படங்கள் பாணியிலேயே எந்தவொரு சம்பவத்தையும் பார்க்கும், விளங்கிக் கொள்ளும் ஒரு போக்கு இருந்தது. நான் அந்தச் சம்பவம் நடைபெற்ற காலத்தில் நாட்டிலும், குறிப்பாக வட பகுதியிலும் நிலவிய அரசியல் சூழல் பற்றியும் விளக்கிவிட்டே, அந்த நிகழ்வைப் பற்றிச் சொன்னேன்.

நான் சம்பவத்தை விளக்கிய பாணி புலிகளுக்கு சலிப்பூட்டுவதாக இருந்தபோதிலும், இடையிடையே ‘கட்டிங்’ செய்து நேரடியாகச் சம்பவத்தின் ‘திரில்லிங்’ காட்சிக்கு அவர்கள் போக முயற்சித்த போதிலும், நான் தொடர் அறுந்துவிடாமல் ‘கதை’யைச் சொல்வதில் அக்கறையாக இருந்தேன். எனவே புலிகளும் விரும்பியோ விரும்பாமலோ, தவிர்க்க முடியாமல் முழுக்கதையையும் கேட்க வேண்டியதாயிற்று. அவர்களுக்கு விளக்கிய பின்னணி விபரமும், சம்பவமும் இதுதான்.

இலங்கையில் 1965ல் நடந்த பொதுத்தேர்தலில் தென்னிலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சிக்கோ அல்லது சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கோ ஆட்சியமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மைப் பலம் கிடைக்கவில்லை. இருப்பினும் அன்றைய அரசியலமைப்பின் பிரகாரம், ஆட்சியமைப்பதற்கு அழைக்கும் அதிகாரம் உள்ள அன்றைய மகாதேசாதிபதி (கவர்னர் ஜெனரல்) இடம் தமக்கு இருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி, தமக்கு ஆட்சி அமைக்கும் அதிகாரத்தை வழங்கும் படி ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் டட்லி சேனநாயக்க கோரிக்கை விடுத்தார். மகாதேசாதிபதியும் அதை ஏற்றுக்கொண்டார்.

அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தனது தலைமையில் ஏழு கட்சிகளைக் கொண்ட கூட்டணி அரசு ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சி அமைத்தது. வேடிக்கை என்னவெனில், இந்தக் கூட்டணி அரசில் கடந்த காலங்களில் தமிழ் - சிங்கள இனவாதத்தைக் கக்கி, நாட்டில் இனக் கலவரங்களுக்கு கால்கோள் இட்ட, வடக்கின் தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ் கட்சி என்பனவும், தெற்கின் கே.எம்.பி. இராஜரத்ன, ஆர்.ஜீ.சேனநாயக்க போன்றோரின் கட்சிகளும் ஒன்றாக இணைந்து கொண்டமைதான். போலி இனப்பற்றை விட, முதலாளித்துவ வர்க்கபாசமே மேலானது என்பதை, அவர்களுடைய அந்த இணைவு எடுத்துக்காட்டியது.

அந்த அரசு ஏகாதிபத்தியத்துக்குச் சார்பானதாகவும், பெரும் முதலாளிகளுக்குச் சார்பானதாகவும் இருந்ததால், மக்களுக்கு விரோதமாக என்னென்ன காரியங்களையெல்லாம் செய்ய முடியுமோ, அத்தனையையும் செய்தது. அதன் காரணமாக நாட்டில் தொழிலாளர் வேலை நிறுத்தங்களும், விவசாயிகள் போராட்டங்களும், மாணவர் கிளர்ச்சிகளும் பரவலாக இடம்பெறத் தொடங்கின. இவற்றுக்கு மேலதிகமாக, வடக்கில் தமிழரசு – காங்கிரஸ் ஆதரவு பெற்ற உயர்சாதி வெறியர்களின் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்ததால், அதற்கெதிரான புரட்சிகரப் போராட்டங்களும் வெடித்துக் கிளம்பியிருந்தன. அதுதவிர, ஐக்கிய தேசியக் கட்சி கூட்டரசாங்கம் திடீரெனக் கொண்டுவந்த தமிழ்மொழி விசேட மசோதா சட்ட மூலத்துக்கு எதிராக, சிறீலங்கா – சமசமாஜ - கம்யூனிஸ்ட் கட்சிகள் புதிதாக அமைத்திருந்த கூட்டு முன்னணி 1966 ஜனவரி 8ம் திகதி நடாத்திய பொதுவேலைநிறுத்தக் கிளர்ச்சிகளின் போது, பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பௌத்த பிக்கு ஒருவர் மரணித்திருந்தார்.

இந்தச் சம்பவங்களால் அரசுக்கு நெருக்கடியும், நாட்டில் பதட்ட நிலையும் உருவாகி வந்தது. எனவே அரசு பொதுமக்களை அடக்க வேறு வழிவகைகளைக் கைக்கொள்ள ஆரம்பித்தது. அன்றைய அரசாங்கத்தில் பிரதமருக்கு அடுத்த ஸ்தானத்தில் இருந்தவர், 1953 ஆகஸ்ட் ஹர்த்தாலுக்கு வழிவகுத்த அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசின் நிதியமைச்சரும், பிற்காலத்தில் இனப்பிரச்சினையை யுத்தமாக மாற்றியவருமான ஜே.ஆர்.ஜெயவர்த்தன. தீவிர அமெரிக்க விசுவாசியான அவர், அமெரிக்காவில் மட்டும் இருப்பதைப் போன்று, இலங்கையில் முன்னொருபோதும் இல்லாத இராஜாங்க அமைச்சு என்ற புதிய அமைச்சை உருவாக்கி, அதன் அமைச்சராக தான் இருந்துகொண்டார். அந்தப் பதவியில் இருந்துகொண்டு, அவர் ஐக்கிய தேசியக் கட்சி அரசு எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கு இராணுவப் பாணியிலான தீர்வுகளை முன்வைக்க முயன்று கொண்டிருந்தார்.




அதேவேளை, தமிழ் கட்சிகளும் அங்கம் வகித்த அந்த அரசாங்கம், தமிழர்களை மட்டும் வேறுபடுத்திக் காட்டும் வகையில், ஆள் அடையாள அட்டை மசோதா ஒன்றைப் பாராளுமன்றத்தில் கொண்டுவந்தது. (அந்த சட்டம்தான் பின்னர் முழுநாட்டு மக்களுக்குமான அடையாள அட்டைக்கு வழி வகுத்தது). அதை எதிர்த்த தமிழரசுக் கட்சியின் ஊர்காவற்துறைப் பாராளுமன்றப் பிரதிநிதி வ.நவரத்தினம், தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

அதுதவிர, அரசாங்கம் வடக்கில் கள்ளக்கடத்தலைத் தடுப்பதற்கெனக் கூறிக்கொண்டு, வடக்கிற்கு மட்டும் எழுதப்படாத இன்னொரு சட்டத்தையும் அமுல் செய்தது. அதாவது வடக்கின் கற்கோவளம் கடற்கரையிலிருந்து, சுண்டிக்குளம் வரையான பகுதியில், கடற்கரையிலிருந்து உள்ளாக மூன்று மைல் தூரத்திற்கு இலங்கையில் விளைகின்ற கராம்பு, கறுவா, ஏலக்காய் போன்றவற்றை யாரும் வீடுகளில் வைத்திருக்கக்கூடாது என அறிவித்தது. (அந்த நாட்களில் இந்தப் பொருட்களுக்கு இந்தியாவில் பெரும் கிராக்கி இருந்ததால், வல்வெட்டித்துறையை மையமாகக் கொண்ட கள்ளக்கடத்தல்காரர்கள் அவற்றை அங்கு கடத்தி வந்தனர்). அதாவது இலங்கையில் விளைகின்ற பொருட்களை, இலங்கையின் ஒரு பகுதிக்குள்ளேயே, இலங்கையர்கள் வைத்திருக்கக்கூடாது என்று சட்டம் போட்டது!

தனது பாதுகாப்பு அமைப்புகள் மூலம் கள்ளக்கடத்தலைத் தடுக்க வக்கில்லாத அரசு, இப்படியான ஒரு முட்டாள்தனமான சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தது. (உண்மையென்னவென்றால், அன்றைய காலகட்டத்திலும் சரி, பின்னர் யுத்தம் நடைபெற்ற காலத்திலும் சரி, வேலியே பயிரை மேய்வது போல, கடத்தல்காரர்களுக்கும், பின்னர் புலிகளுக்கும் கடத்தல் வேலைகளுக்கு பாதுகாப்புப் படையினரின் ஒரு பிரிவினரே உதவி வந்துள்ளனர் என்பதை அரசே ஆதாரபூர்வமாகக் கண்டு பிடித்து வெளியிட்டிருக்கிறது!)

இந்த நிலைமையில், எமது புரட்சிகர இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்த இரண்டு சட்டங்களையும் வன்மையாக எதிர்த்தது. அவற்றுக்கெதிராக வல்வெட்டித்துறை உட்பட வடக்கின் பல பகுதிகளில் கண்டன எதிர்ப்புக் கூட்டங்களையும் நடாத்தியது. மறுபக்கத்தில், தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைப் போராட்டத்துக்கும் கட்சி தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் மூலம் புரட்சிகரமான முறையில்


முதற்பக்கம்
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
திருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
நோயல்நடேசன்
வளர்பிறை
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே
யாழமுஸ்லீம்
புண்ணியாமீன்
யவனா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஹீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
ஆறாம் அறிவு
எதுவரை
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN
BBC
Newsnow

Yarl TV

தலைமை கொடுத்து வந்தது. அதனால் அரசுடன் இணைந்திருந்த தமிழ் கட்சிகளுக்கு எம்மீது கடும் கோபம் ஏற்பட்டிருந்ததுடன், பொலிசாருடனும் எமது கட்சியினருக்கு சில இடங்களில் முறுகல் நிலை இருந்த வந்தது.

இந்தச் சூழ்நிலையில், பொலிசார் மட்டுமின்றி, இராணுவத்தினரும் வடக்கின் கடற்கரையோரங்களில் உள்ள வீடுகளில் புகுந்து தேடும் நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தனர். அப்படியான சந்தர்ப்பங்களில் இராணுவத்தினரால் பல பொதுமக்கள் தாக்குதலுக்கும் உள்ளாகினர். குறிப்பாக வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, மாதகல், காரைநகர் போன்ற இடங்களில் இந்தச் சம்பவங்கள் அடிக்கடி நடந்தன. ஒரு சந்தர்ப்பத்தில் இராணுவத்தினருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கே.துரைரத்தினமும் தாக்குதலுக்கு உள்ளானார். இதனால் வடக்கில் பொதுமக்கள் மத்தியில் அச்சமும் பாதுகாப்பற்ற ஒரு நிலையும் தோன்ற ஆரம்பித்திருந்தது. அரசுடன் இணைந்திருந்த தமிழ் கட்சிகள் இரண்டும், மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளில் கவனம் செலுத்தாது, ஐக்கிய தேசியக் கட்சி என்ற கள்ள நாயகனுடன் கூடிக்குலாவுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர்.

வடக்கில் நிலைமைகள் நாளுக்குநாள் மோசமடைந்து செல்வதைக் கண்ணுற்ற எமது கட்சி, கட்சியினதும், கட்சி வாலிப அணியினதும் வட பிரதேச குழுக்களின் கூட்டுக் கூட்டத்தைக் கூட்டி ஆராய்ந்தது. அதன் முடிவில் கட்சியின் வட பிரதேசச் செயலாளர் தோழர் வீ.ஏ.கந்தசாமியும், வாலிப முன்னணியின் வட பிரதேசத் தலைவர் தோழர் கே.ஏ.சுப்பிரமணியமும் கூட்டாகக் கையெழுத்திட்டு வெளியிட்ட ஓர் அறிக்கையில், பொலிசாரினதும் இராணுவத்தினதும் தாக்குதல்களிலிருந்து தப்புவதற்குப் பொதுமக்கள் தம்மைத்தாமே தயார்படுத்த வேண்டும் எனப் பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்தனர். அந்த அறிக்கை பத்திரிகைகளில் வெளியானதுடன், துண்டுப் பிரசுரமாகவும் அச்சடிக்கப்பட்டு மக்கள் மத்தியில் பரவலாக விநியோகிக்கப்பட்டது. கிளிநொச்சிப் பகுதியிலும், குறிப்பாக கட்சி செல்வாக்குடன் திகழ்ந்த விசுவமடு, தருமபுரம் பகுதிகளிலும் அது விநியோகிகப்பட்டது.

இந்த அறிக்கை வெளிவந்த சில நாட்களிலேயே தருமபுரம் நெத்தலி ஆற்றங்கரையில் இராணுவத்துக்கும், அப்பகுதி இளைஞர்களுக்கும் இடையிலான அந்த விரும்பத்தகாத மோதல் சம்பவம் நிகழ்ந்தது. அந்த இடத்துக்கு இராணுவம் எவ்வாறு வந்தது என்ற கேள்வி பலரிடம் எழலாம். அதற்கும் ஒரு பின்னணி வரலாறு உள்ளது.

அதையும் விளங்கிக் கொண்டால்தான், இன்று வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேறக் கோரிக்கொண்டு, வடக்கு கிழக்கு முழுவதிலும் வலைப்பின்னல் போல இராணுவ முகாம்களை அமைத்த முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஆதரித்த, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கபட நாடகத்தையும், அதற்கு 40 வருடங்களுக்கு முன்னரே ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்துகொண்டு வடக்கில் இராணுவ முகாம்களை அமைக்க வழிவகுத்துக் கொடுத்த தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகளின் மோசடி நடவடிக்கைகளையும், இன்றைய தமிழ் சந்ததியினரும் அறிந்துகொள்ள முடியும். அதுமாத்திரமல்ல, இன்றும் யாழ்ப்பாணத்தில் நிலபாவாடை விரித்து, தொழிலாளர் விரோத ஐக்கிய தேசியக் கட்சியினரை அழைத்து, தொழிலாளர் (மே) தினத்தில் கூட்டம் நடாத்தும் இன்னமும் திருந்தாத, தமிழ் கூட்டமைப்பின் திமிர்த்தனமான மோசடிகளையும் புரிந்துகொள்ள முடியும்.

எனவே, முன்னைய காலங்களில் ஒருபோதும் இராணுவ முகாம் இருக்காத விசுவமடு – தருமபுரப் பகுதியில், எவ்வாறு இராணுவத்தினரின் பிரசன்னம் 1970களிலேயே ஏற்பட்டது என்பதை, புலிகளுக்கு விளக்குவதில் நான் ஆர்வமாகவும், அக்கறையாகவும் இருந்தேன்.

தொடரும்

முன்னைய பதிவுகள்